

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி விஜய் மஹாலில் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த 200 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு மற்றும் ஆத்தூர், ரெட்டியார் சத்திரம், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, திண்டுக்கல் ஒன்றியங்களைச் சேர்ந்த 277 பெண்களுக்கு ரூ.2கோடியே 77 லட்சத்து 7 ஆயிரத்து 666 மதிப்பிலான தாலிக்கு தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பங்கேற்றார். அருகில் மாவட்ட ஆட்சியர் சரவணன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராமன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் பிரதீபா கனகராஜ் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் மனித நேயத் திட்டங்களில் மற்றுமோர் மாபெரும் வெற்றித் திட்டம்!

# ‘முதல்வர் மருந்தகம்’ - 8 நாட்களில் - 50 ஆயிரத்து 53 பேர் பயன்!

## ரூ.27 லட்சத்திற்கு மேல் மருந்துகள் விற்பனை!

சென்னை, மார்ச் 6-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பல்வேறு மனிதநேயத் திட்டங்களில் மற்றும் ஒரு மாபெரும் வெற்றித் திட்டமான “முதல்வர் மருந்தகம்” திட்டத்தில் 8 நாட்களில் ரூ.27 இலட்சத்திற்கு மேல் மருந்துகள் விற்பனையாகியுள்ளன. ரூ.7 இலட்சத்து 68 ஆயிரத்து 766 ரூபாய் மக்களுக்கு சேமிப்பு கிடைத்துள்ளது. 50 ஆயிரத்து 53 பேர் பயனடைந்துள்ளனர்.

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள் 2021-ல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையைக் குறித்து அவர்கள் வளம்பெற பல அருமையானத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

மகளிர்க்கும், மாணவியர்க்கும், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர்க்கும் அரசு நடத்திவரும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா “விடியல் பயணத் திட்டம்”. மகளிர்க்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்”. அரசுப் பள்ளிகளில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் “புதுமைப் பெண் திட்டம்”; அதே போல மாணவர்களுக்கும் மாதம் 1,000 ரூபாய் வழங்கும் “தமிழ்ப் புதல்வன் திட்டம்”, “கலைஞர் வீடு வழங்கும் திட்டம்”, முதலான பல திட்டங்களை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இத்தகையத் திட்டங்களால், குடும்பங்களில் ஏற்படும் செலவுகள் குறைகின்றன. பொருளாதாரம் உயர்கிறது. பொதுவாக ஒவ்வொரு குடும்பத் திற்கும் உணவுச் செலவை அடுத்து அதிகம் செலவாவது அக்குடும்பத்தின் கல்வி வளர்ச்சிக்கும், மருத்துவச் செலவுகளுக்குமேயாகும். இந்த இரண்டு செலவினங்களையும் குறைப்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். அதனால்தான், கல்வியும் மருத்துவமும் என் இரண்டு கண்களுக்குச் சமம் என்று கூறி இந்த இனங்களில் குடும்பங்களுக்கு ஏற்படும் செலவினங்களை குறைத்து வருகிறார்கள்.

மருத்துவத் துறையைப் பொருத்தவரை, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தைச் செயல்படுத்தி மருத்துவப் பணியாளர்கள் பொதுமக்களின் இல்லங்களுக்கேச் சென்று மருந்துகளையும், மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்கள். இத்திட்டம் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று இதுவரை 2 கோடிக்கு மேலான மக்கள் தமிழ்நாட்டில் பயனடைந்து வருகின்றனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மனிதாபிமான உணர்வோடு ஏழை எளியவர் மீது கருணைகொண்டு அவர்களுக்கு மேலும் உதவுவதற்காக இந்தியாவிலேயே புதுமையாக முதல் முறையாக ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டம்தான் முதல்வர் மருந்தகம் திட்டம். தமிழ்நாடு முழுவதிலும் தனியார் மூலமாக 462 முதல்வர் மருந்தகங்களும், கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக 538 முதல்வர் மருந்தகங்களும் ஆக மொத்தம் 1,000 முதல்வர் மருந்தகங்கள் முதலமைச்சர் அவர்களால் 24.2.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டன.

இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட கடந்த 8 நாட்களில் அதாவது 3.3.2025 வரை முதல்வர் மருந்தகங்களில் தனியார் கடைகளில் 13 இலட்சத்து 73 ஆயிரத்து 449 ரூபாய்க்கும், கூட்டுறவு நிறுவனக் கடைகளில் 13 இலட்சத்து 69 ஆயிரத்து 380 ரூபாய்க்கும் மொத்தம் 27 இலட்சத்து 42 ஆயிரத்து 829 ரூபாய்க்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த கடைகளில் வாங்கப்படும் மருந்துகளின் விலையில் 50 % முதல் 75 % வரை குறைந்த விலைக்கு வழங்கப்படுகின்றன. இதன் மூலம் கடந்த 8 நாட்களில் பொதுமக்களுக்கு 7 இலட்சத்து 68 ஆயிரத்து 776 ரூபாய் சேமிப்பு கிடைத்திருக்கிறது.

தனியார் நடத்தும் கடைகளில் 22 ஆயிரத்து 332 பேரும், கூட்டுறவு நிறுவன முதல்வர் மருந்தகங்களில் 27 ஆயிரத்து 721 பேரும் என மொத்தம் 50 ஆயிரத்து 53 பேர் பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலம் 1,000 பேர் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். தனியார் நடத்தும் ஒரு கடைக்கு 3 இலட்சம் ரூபாயும், கூட்டுறவு நிறுவனம் நடத்தும் கடைக்கு 2 இலட்சம் ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**முதல்வருக்கு நன்றி தெரிவித்த ‘முதல்வர் மருந்தக’ உரிமையாளர்**

இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்த மக்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி வருகிறார்கள்.

சென்னை புளியந்தோப்பு பகுதியில் ‘முதல்வர் மருந்தகம்’ அமைத்துள்ள அப்ரீன் என்பவர், “நான் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன். டி.பார்ம் படித்துள்ளேன். எனது பெற்றோர் என்னை மிகவும் சிரமப்பட்டு படிக்கவைத்தனர். படிப்பை முடித்து வேலை தேடியபோது முதல்வர் மருந்தகம் குறித்து அறிவிப்பு வெளியானது. உடனே விண்ணப்பித்தேன். எனக்கு முதல்வர் மருந்தகம் வைக்க அனுமதியும் கிடைத்தது. இந்த மருந்தகம் அமைப்பதற்காக எனக்கு 3 இலட்சம் ரூபாய் மானியமும் கிடைத்துள்ளது. என்னை தொழில் முனைவோராக்கி மாதம் 50 ஆயிரம் ரூபாய் வரை நிரந்தர வருமானம் கிடைக்கும் அருமையான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறியுள்ளார்.

இவரைப் போல அனைவரும் மகிழ்ந்து பாராட்டுகின்றனர். பொதுமக்களும் குறைந்த விலைக்கு மருந்துகள் கிடைப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றனர். முதலமைச்சர் அவர்களின் புகழ்பாடும் பல்வேறு திட்டங்களைப் போலவே இந்த ‘முதல்வர் மருந்தகம்’ திட்டமும் ஒரு வெற்றித் திட்டமாகும்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில், விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் இரத்ததான முகாமை வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். இரத்தான முகாமை தலைமையேற்று 720 நபர்களுடன் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் முதல் இரத்த தானத்தை வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருவக்கரை பாஸ்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, க.மும்மூர்த்தி, வி.ஜி.பிரபாகரன், கு.செல்வமணி, கே.எஸ்.இராஜி, பி.கே.டி.முரளி, கணேசன், வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பஞ்சநாதன், டி.என்.ஜே.சம்பத், ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர்கள் சீனு செல்வரங்கன், இரா.கேசவன், ஹரிராமன், முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் வி.எம்.ஆர்.சிவா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி, சோழவந்தான், காரைக்குடி, திருவைகுண்டத்தில்

# ரூ.12 கோடி செலவில் - 4 ‘முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்குகள்!’

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 6-

துணைமுதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2025) சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அருகில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், சென்னை சேப்பாக்கம்திருவல்லிக்கேணி, மதுரை மாவட்டம் - சோழவந்தான், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, தூத்துக்குடி மாவட்டம் - திருவைகுண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தலா ரூ. 3 கோடி வீதம் மொத்தம் 12 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4 “முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்குகளை” திறந்துவைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அருகில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சி கூடம், 400 மீ நீளதடகள பாதை, பார்வையாளர் இருக்கைகளுடன் கூடிய ஹாக்கி மைதானம், 2 கிரிக்கெட்பயிற்சி மைதானங்கள் அடங்கிய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்கான ‘முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தை’ திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் காணொலிக் காட்சி வாயிலாக மதுரை மாவட்டம் - சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் ரூ.3 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 200 மீ தடகள ஓடுபாதை, திறந்த வெளி கூடைப்பந்து, கையுந்து பந்து, கபாடி, கோகோ மைதானங்கள், நீளம் தாண்டுதல் பாதை, பார்வையாளர் மாடத்துடன் கூடிய முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து, சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 400 மீ தடகள ஓடுபாதை, திறந்த வெளி கூடைப்பந்து, கையுந்து பந்து, கபாடி, கோகோ ஆடுகளங்கள், நீளம் தாண்டுதல் பாதை, பார்வையாளர் மாடத்துடன் கூடிய முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தை திறந்து வைத்தார்.

மேலும், தூத்துக்குடி மாவட்டம் திரு வைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 400 மீ தடகள ஓடுபாதை, கால் பந்து மைதானம், கையுந்து பந்து ஆடுகளம், நீளம் தாண்டுதல் பாதை, பார்வையாளர் மாடத்துடன் கூடிய முதலமைச்சர் சிறுவிளையாட்ட ரங்கத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), ஊர்வசி. செ.அமிர்தராஜ் (திருவைகுண்டம்), எம்.சி.சண்முகையா (ஒட்டப்பிடாரம்), எஸ்.மாங்குடி (காரைக்குடி), காரைக்குடி மாநகராட்சி மேயர் சோ.முத்துத்துரை, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி ஆஷா அஜித், (சிவகங்கை), க.இளம்பகவத், (தூத்துக்குடி), திருமதி மா.சௌ.சங்கீதா (மதுரை), மண்டலக் குழுத்தலைவர் எஸ். மதன்மோகன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

# வேளாண் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் / திட்டங்கள்!

## பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு! அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 6-

வேளாண் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் / திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்து கேட்பு குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

மண்ணைப் பொன்னாக மாற்றும் நம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து அவர்களது வாழ்வை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2021-2022-ஆம் ஆண்டு முதல் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை ஆண்டு தோறும் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. எதிர்வரும் 2025-26-ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் தனி நிதிநிலை அறிக்கையானது ஐந்தாவது முறையாக வரும் மார்ச்-15ஆம் நாள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது. இதன் பொருட்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்ய, பிரத்தியேகமாக உழவர் செயலியில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது, மேலும் tnagribudget2025@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் வேளாண் நிதிநிலையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களைப் தெரிவிக்குமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

### ஒன்றிய அரசைக் கண்டித்து சண்டிகரில்

# மாபெரும் போராட்டம் - விவசாயிகள் பலர் கைது!

## அரியானாவில் விவசாயிகளின் உண்ணாவிரதம் 100வது நாளை எட்டியது!

சண்டிகர்,மார்ச்.6-

விவசாய சந்தைப்படுத்தல் தேசிய கொள்கைக்கு எதிராக யூனியன் பிரதேசமான சண்டிகரில் விவசாயிகள் பிரமாண்ட போராட்டம் நடத்தினர்.. முன்னதாக, சண்டிகர் செல்லும் 18 முக்கிய சாலைகளை காவல்துறையினர் மூடி போராட்டத்தை தடுக்க முயற்சிகளை மேற்கொண்டனர்.

மேலும், ஏராளமானோ போலீசார் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். இரவோடு, இரவாக விவசாய சங்க தலைவர்கள் மற்றும் விவசாயிகளை காவல்துறையினர் கைது செய்ததால் அங்கு பரபரப்பான சூழல் நிலவுகிறது.

இதனிடையே குறைந்த பட்ச ஆதரவு விலை கோரி, அரியானா மாநிலம் கனுரியில், விவசாயி தாலேவால் நடத்தும் உண்ணாவிரதம் நேற்று 100வது நாளை எட்டியுள்ளது.

அவருக்கு ஆதரவாக 100 விவசாயிகள் நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பஞ்சாபில் அனைத்து தாலுகா, மாவட்ட அளவில் விவசாயிகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பல்பீர் சிங் ராஜேவால் உள்ளிட்ட 9 முக்கிய விவசாய சங்க தலைவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தொகுதியில் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72வது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக சீர்மரபினர் நலவாரியத் துணைத் தலைவர் இராசா அருண்மொழி ஏற்பாட்டில் அயன்கொல்லங்கொண்டான் ஊ.ஒ.தொ.பள்ளி, அயன்கொல்லங்கொண்டான் அரசு உயர்நிலைப்பள்ளி, இராஜபாளையம் நகராட்சி 10 வது வார்டு தொடக்கப்பள்ளி, இராஜபாளையம் நகரம் ரோணுகாதேவி பள்ளி, சஞ்சீவிநாதபுரம் தொடக்கப்பள்ளி, ஆகிய 5 பள்ளிகளில் 750 மாணவ செல்வங்களுக்கு மதிய உணவாக பிரியாணி வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. , நகர்மன்றத் தலைவர் பவித்ரா ஷியாம், நகரச் செயலாளர்கள், இராமமூர்த்தி, மண்டராஜா, ஜெகதீஸ்வரி, உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், மாவட்ட தொண்டரணி, கருப்பழகு, முன்னாள் நகர துணைச் செயலாளர் சரவணன், ஒன்றிய துணைச் செயலளர் ஜெயந்தி, சேத்தூர் பேரூர் செயலாளர் சிங்கம்புலி அண்ணாவி, கழக சார்பு அணி நிர்வாகிகள், உதயா மன்ற நிர்வாகிகள் சேத்தூர் சண்முகசுந்தரம், கலைச்செல்வன், முனியராஜ், கொல்லங்கொண்டான் சிவா, மாரிமுத்து மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி எரியோடு கலைஞர் திடலில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும் உணவுத்துறை அமைச்சருமான அ.ர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்ச்சியில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். காந்தி ராஜன், ஒன்றிய செயலாளர்கள் கவிதா பார்த்திபன் வீர.சாமிநாதன், சுப்பையன், சீனிவாசன்,பாண்டி ,ராஜலிங்கம்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹரிஹரன் சிறப்புரை ஆற்றினர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ரவிசங்கர் நன்றி உரையாற்றினார் மற்றும் மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.